தொன்போஸ்கோ அன்பு இல்லம் சமூக சேவை நிறுவனம்
(சிதை பொருள் சேகரிப்போர் நல்வாழ்வுத் திட்டம்)

## ஆண்டறிக்கை 1989-90

தொன்போஸ்கோ நூற்றாண்டு விழாவின் நினைவாக 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 19 ஆம் நாள் சேலம் மாநகரில் தொன்போஸ்கோ அன்பு இல்லம், நிறுவ இடம் வாங்கப்பட்டது. இந்த இல்லத்தின் தொடக்கவிழா 1989ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 16ஆம் நாள் நடைபெற்றது. 'அவ்விழாவிற்கு அன்றைய மாவட்ட ஆட்சித்தலைவர் உயர்திரு. பாருக்கி, I.A.S., அவர்களும், மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் உயர்திரு காசி விஸ்வநாதன், I.P.S., அவர்களும் சலேசிய மாநிலத்தலைவர் அருட்திரு. வின்செண்ட் துரைராஜ் அடிகளார் அவர்களும் வருகை தந்து விழாவினைச் சிறப்பித்தனர்.

இந்த இல்லம் சேலத்தில் அமைவதற்குப் பெரிதும் ஊக்கமும், ஆக்கமும் தந்து, பேருதவி நல்கிய எங்கள் வணக்கத்திற்குரிய தந்தை அருட்திரு. பிரான்சிஸ் சுவாஸ் அடிகளார் அவர்களுக்கு எங்களின் நன்றியை இந்த நேரத்தில் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

**நோக்கம்:**

சாலை ஓரங்களிலும், இரயில் நிலையங்களிலும் கேட்பாரற்று அலைந்து சிதை பொருட்களைச் சேகரித்து வாழும், கைவிடப்பட்ட இளைய தலைமுறையினருக்குச் சாதி, சமய பேதமின்றி நல்வாழ்வளிக்க உருவானதே தொன்போஸ்கோ அன்பு இல்லம்.

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் M.S.W. துறையின் உதவியின் மூலம் சேலத்திலுள்ள 500க்கும் மேற்பட்ட ஆதரவற்ற இளைஞர்களைச் சந்தித்ததின் வாயிலாக ஏறக்குறைய 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அன்புக்காக தொன்போஸ்கோ அன்பு இல்லத்தை நாடிவர ஆரம்பித்துள்ளனர். அவர்களில் 50 இளைஞர்கள் தொன்போஸ்கோ அன்பு இல்லத்திலேயே தங்கியுள்ளனர்.

**இளைஞர்களுக்கு அன்பு இல்லம் ஆற்றும் பணிகள்:-**

1. இளைஞர்கள் தங்குவதற்கு நல்ல பாதுகாப்பான இடவசதி உள்ளது.
2. அவர்கள் குளிப்பதற்கும், துவைப்பதற்கும், நவீன வசதிகள் உள்ளன.
3. அவர்களின் உடைமைகள், சேகரித்த சிதை பொருட்கள் வைப்பதற்காக பூட்டுடன் கூடிய பெட்டி ஒவ்வொருவருக்கும் உள்ளது.
4. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கேற்ப அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளும் உள்ளன.
5. இரவில் படிக்க ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு ஆசிரியரை நியமித்து கல்வி கற்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

6. படித்து முன்னேற்றமடையவேண்டும் என்ற எண்ணமுள்ள இளைஞர்களை தொன்போஸ்கோ கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பி கல்வி கற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

7. அவர்களின் பொழுதுபோக்கிற்காக கேரம் விளையாடவும், வீடியோ மூலம் படம் பார்க்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

8. வேலை செய்வதில் விருப்பமுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் தேடிக் கொடுத்து வேலையில் அமர்த்தவும் உதவி செய்கின்றது.

9. சில இளைஞர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா வாங்கிக் கொடுத்து அதன் மூலம் முன்னேற்றமடைய உதவுகிறது.

10. பெற்றோர்களைப் பிரிந்து வந்த இளைஞர்களுக்கு நல்ல அறிவுரைகள் வழங்கப்பட்டு அவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் மீண்டும் சேர்ந்து வாழ இந்த இல்லம் உதவி செய்கிறது.

11. "சமூக விரோதிகள்" என்ற தவறான பட்டத்தைச் சூட்டி போலிசோ பொது மக்களோ அவர்களைத் துன்புறுத்தா வண்ணம் "தொன்போஸ்கோ அன்பு இல்ல இளைஞன்" என்ற அடையாள அட்டை (புகைப்படம், பெயருடன்) வழங்கப்பட்டுள்ளது.

12. ~~"உழைப்பின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற நோக்கில் அவர்கள் மகிழ~~ அடிக்கடி விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகிறது. வெளியூர்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு ~~கேம்ப்~~ முகாம் நடத்தி அவர்களை ~~மகிழ்விக்கப்படுகின்றனர்~~. நல்ல குடிமக்களாக ஆக்கியுள்ளது.

13. <u>இளைஞர்களால் தான் இளைஞர்களுக்கு உதவமுடியும்</u> (YOUTH FOR YOUTH) என்ற கருத்தில் சேலத்தின் பலப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு முகாம்களும், கருத்தரங்குகளும் நடத்தி அதன்மூலம் அவர்களது சேவைகளை இந்த ஆதரவற்ற இளைஞர்களின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்த அன்பு இல்லம் முயன்று வருகிறது.

   1. வரும் ஆண்டுகளில் படிக்க ஆர்வமுள்ள இளைஞர்களை மேற்கொண்டு படிக்க வைக்கவும்,

   2. பொறுப்புள்ள இளைஞர்களுக்கு வங்கிகளின் மூலம் சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கவும்,

   3. கூட்டுறவு சிறு பொருள் <u>கொள்முதல்</u> அங்காடி நிறுவவும்,

   4. டைலரிங், மோட்டார், சைக்கிள் மெக்கானிக் போன்றவற்றில் தொழிற் பயிற்சி அளிக்கவும் தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறு தொன்போஸ்கோ அன்பு இல்லம் ஆதரவற்ற இளைஞர்களை, நேர்மையான நல்ல இந்திய குடிமக்களாக சமுதாயத்தின் கண்ணியமிக்க மனிதர்களாக மாற்றும் சீரிய சமூக நலப் பணியை ஆற்றி வருகின்றது.

தொன்போஸ்கோ அன்பு இல்லத்தின் வளர்ச்சியில் சேலத்து பொதுமக்களும் நிறுவனத்தார்களும் பெரிதும் உதவிபுரிந்து வருகின்றனர். குறிப்பாக ஏற்காடு சலேசியன் கல்லூரி எங்களுக்கு பலவிதங்களிலும் உதவியாக உள்ளது. தூய மரியன் ஹோம் மருத்துவமனை, ~~சலேசியன்~~, சகோதரிகள் எங்கள் இளைஞர்களுக்கு இலவசமாக முகம் கோணாமல் மருத்துவ சேவை செய்துவருகின்றார்கள். எங்கள் இளைஞர்களை தங்களது நிறுவனங்களுக்கு அழைத்து அவர்களுக்கு கலைநிகழ்ச்சிகள் நடத்தி காண்பித்து அவர்களை மகிழ்வித்து உதவிகளைச் செய்துவருகின்ற கன்னி கன்னியர் இல்லம் சகோதரிகள் பாத்திமா கன்னியர் இல்ல சகோதரிகள், மற்றும் உதவி நல்கிய அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியை கரம் குவித்துச்